"விடுதலை"
சந்தா விகிதம்

தனிப்பிரதி 7 காசுகள்

[ முன்பணமாக ]

[ இந்திய சந்தா விகிதம் ]

| | | ரூ. காசு. |
|---|---|---|
| 1 மாதம் | ... | 2—15 |
| 3 மாதம் | ... | 6—25 |
| 6 மாதம் | ... | 12—00 |
| 1 ஆண்டு | ... | 21—00 |

வெளிநாடு
1 ஆண்டு சந்தா ரூ. 30—00

109

VIDUTHALAI

# விடுதலை

ESTD:1935

திராவிடர் தமிழ்த் தினசரி

Phone No. 83977.

REGD-No: M. 4789


**பெரியார் பொன்மொழி**

"திராவிடர்கழகம் ஒரு அரசியல் கட்சியல்ல; சமுதாயத்துறையில் மாறுபாடு அடையச் செய்யும் கட்சியாகும். நம்மிடையே அநேக சாதிப் பிரிவுகள் இருக்கின்றன. 4-ம் சாதி, 5-ம் சாதி பறையன், சக்கிலி முதலிய பிரிவுகள் ஒழிந்த ஒரே இன மக்களாக, ஒரே பிரிவாக இருக்க வேண்டுமென்பதே திராவிடர் கழகக் கொள்கை. சாதிகள் ஒழிந்தாலும் ஒழிந்துவிடுமென்ற அச்சத்தால்தான் ஆச்சாரியார் சாதிகள் இருக்க வேண்டுமென பிரசாரம் செய்து வருகிறார்.


மலர் 22 || சென்னை சார்வரி ஆண்டு மாசிமீ 15உ (26—2—61) ஞாயிறு★வெளியீடு சார்வரி ஆண்டு மாசிமீ 16உ (27—2—61) திங்கள் விலை 7 காசுகள் || இதழ் 263


# ஏழைகட்கு இதம் தரும் தமிழ்நாட்டின் பணத்திட்டம்

## புதியவரி இல்லை, விற்பனைவரித் திட்டத்தில் புதிய சலுகை

## சாதி சமய வேறுபாடின்றி எல்லா ஏழை மாணவர்க்கும் 11-வது வகுப்புவரை இலவசக் கல்வி

### 1,66,000 மாணவர் புதிய - வசதி பெறுவர்

### 1961-62ல் ரூ. 285 லட்சம் பற்றாக்குறை ஏற்படலாம்

சென்னை, பிப். 26—

"தமிழ் நாடு அரசினர் 1. 66,000 ஏழை மாணவர்கட்கு சலுகை அதிகரிக்கும் வகையில் நேற்று அசெம்பிளியில் 1961—62ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரித்து அளித்தனர். இவ்வாண்டு முதன்முதலாக புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை விற்பனை வரிவிதிப்பதற்கும் மொத்தமாக வரி கட்டும் சலுகை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் திரு சி. சுப்ரமணியம் அவர்கள் கொண்டுவந்த திட்டப்படி எதிர்பார்க்கும் வருமானம் ரூ 87 கோடியே 50 லட்சம். செலவு ரூ 90 கோடியே 35 லட்சம். எனவே பற்றாக்குறை ரூ 2 கோடி 85லட்சம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கல்விச் சலுகைபற்றி அறிவிக்கும்போது சபையோர் பலத்த ஆரவாரம்செய்து வரவேற்றனர்.

1961—62-ம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் பணத்திட்டத்தைக் கொண்டுவந்து அசெம்பிளியில் ஒன்றரை மணி நேரம் நிதியமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் பேசியதன் சாரம்:—

சென்ற ஆண்டு திருத்த மதிப்பீடுகளின்படி ரூ. 58 லட்சம் உபரி எதிர்பார்த்தும் ரூ. 53 லட்சம்தான் நின்றது. இவ்வாண்டு (1960-61) மதிப்பீட்டின் படி ரூ. 34. லட்சம் பற்றாக் குறை எதிர் பார்த்தோம். ஆனால் ரூ. 1. கோடி 23 லட்சம் உபரி கிடைக்குமென இப்போது மதிப்பிடப்படுகிறது.

சம்பளக்கமிஷன் சிபார்சுப்படி அரசு ஊழியர்களில் சம்பள உயர்வுத் திட்டப்படி ரூ. 4கோடி கொடுக்கப்பட்ட பிறகும் இவ்வாண்டில் நிதிநிலை அபிவிருத்தி அடைந்திருக்கிறதென்றால் நாட்டின் பொருளாதார நிலை விரைவில் முன்னேறி வருகிறதென்றே அர்த்தமாகும்.

அடுத்த ஆண்டில் 1961-62-ல் வருமானத்திற்கு மேல் ரூ. 283 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கிறோம். இதுவரை மத்திய அரசு உதவிவந்த மான்யத் தொகைகளை நிறுத்திவிட்டபடியால்தான் இந்தப்பற்றாக்குறைஏற்படுவதற்குக் காரணமாகும்.

முன்றாம் திட்ட ஆரம்பகாலத்துடன் மத்திய உதவிகள்நிறுத்தப்பட்டு செலவினங்களின் முழுப்பொறுப்பையும் மாநிலங்களே ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிவிட்டது ஆயினும் புதிய வரி விதிப்புகள் ஏதும் விதிககாமலேயே இந்தத்திட்டம்தயாரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத்திட்டங்களை நிறைவேற்றி மூன்றாவது திட்டத்தின் துவக்கததில் இருக்கிறோம் எனவே இது முக்கியமானதொரு திட்டமாகும்.

**உணவு உற்பத்திக்கு விரிவுத் திட்டம்**

முதலிரண்டு திட்டங்களில் உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுத்து அதிக கவனம் செலுத்தியதன் பயனாக 30 லட்சம் டன் உற்பத்தியிலிருந்து 52 லட்சம் டன்னுக்கு அதிகரிப்பு செய்துள்ளோம். 3—ம் திட்ட முடிவில் 67 லட்சம் டன் உற்பத்தி செய்வதென்பது நமது இலக்கு. இதை நிறைவேற்ற பருவநில இடங்கொடுக்கவேண்டும். இரசாயன உரம் ஏராளமாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் 48000 டன் அமோனியம் சல்பேட் வழங்கினோம். 1956-57-ல் 1 லட்சம்டன்வழங்கப்பட்டது. 1960-61-ல் $1\frac{1}{4}$ லட்சம வழங்கப்படுகிறது. 15·5லட்சம் டன்உணவுஉற்பத்தி அதிகரிக்க போதுமான உர உற்பத்திக்கு வசை செய்ய வேண்டும்.

**நெய்வேலியில் உர உற்பத்தி**

4 லட்சம் டன் அமோனியம் ஃபேட்டும் $2\frac{1}{2}$லட சம்டன்சூப்பர் ஃபாஸ்பேட் உரமும் வேண்டியிருக்கலாம். நெய்வேலியில் அமைக்கப்பட்டு வரும் உரத் தொழிற்சாலையில் $3\frac{1}{2}$ லட்சம் டன் அமோனிய உரத்துக்குச்சமமான $1\frac{1}{2}$ லட்சம் டன் **யூரியா** உரம் அடுத்த ஆண்டில் உற்பத்தி செய்யப்படும்.

தூத்துக்குடியில்தனியார் துறையில் இன்னொரு இரசாயன உரத் தொழிற்சாலை அமைக்க முயற்சித்து வருகிறோம்.

**இயற்கை உரம்** தான் சிறப்பானதாகையால் பசுந்தாள் உர உற்பத்திக்கு வேண்டிய எல்லா முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது. 1500 டன் வித்துக்கள் இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ளது. ஒன்றுக்கு நாலு மடங்காக நகரங்களில் இவ்வாண்டு கழிவு உரம் உற்பத்தி 4லட்சம்டன்னை எட்டியுள்ளது.

4 லட்சம் பேல்கள் உற்பத்தியை $5\frac{1}{2}$ லட்சத்துக்கு உயர்த்த வேண்டும்.

**எண்ணெய்வித்துக்கள்** ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு 15கோடி அந்நிய செலாவணி கிடைத்திருக்கிறது. எனவே வேர்க்கடலை உற்பத்தியிலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது 10. ஆண்டுகளுக்குமுன் 7 லட்சன் இருந்த விளைவு நடப்பு ஆண்டில் 10 லட்சம் டன்னுக்கு உயர்ந்துள்ளது,

**சர்க்கரை உற்பத்தி**

தமிழ்நாட்டில் மற்றொரு முக்கிய விளைவு கரும்பு பத்து ஆண்டுகளில் 19 லட்சம் டன் கரும்பு விளைவு அதிகரித்து, நடப்பு ஆண்டில் 41 லட்சம் டன், விளைகிறது— அடுத்தத் திட்டத்தில் மேலும் 10 லட்சம் டன் அதிகரிக்க அவசியம் ஏற்பட்டுள்ளது. சர்க்கரை 1 லட்சம் டன் உற்பத்தியாவதை 2 லட்சம் டன்னுக்கு உயர்த்த வேண்டும். நமது மாநிலத்தில் ஏக்கர் சராசரி விளைவுகாணகிறோம் 25 டன் சராசரி காண்கிறோம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

### 1961-62க்கு தமிழ்நாடு பட்ஜெட் கண்ணோட்டம்

(லட்சக்கணக்கில் மதிப்பீடு)

| | 1960-61க்கு திருத்தப்பட்டது. | 1961—62க்கு மதிப்பீடு |
|---|---|---|
| வரவு : | ரூ. 8928·96 | ரூ. 8750·09 |
| செலவு : | ரூ 8806·24 | ரூ. 9035·33 |
| உபரி : | 122·72 | |
| பற்றாக்குறை | | ரூ. 285·24 |

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தற்போது பஞ்சாயத்து யூனியன்கள் இடபணியில் தீவிரமாக ஈடுபடும் என எதிர்பார்க்கிறோம்.

**உயர்ந்தவித்துக்கள்** வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. விதைப் பண்ணைகள் 210 நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 30லட்சம் செலவாகும். கிராம விவசாயிகளும் பொறுக்கு விதைகளை தயாரிப்பதை ஊக்குவிக்கப்படும்;

**தமிழ்நாட்டுக்கு முதலிடம்**

இந்தியாவிலேயே அதிகஉணவு உற்பத்தியில் தமிழ்நாட்டுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. 1959—60-ல் ஏக்கருக்கு 1332 ராத்தல் சராசரி அரிசி விளைந்துள்ளது. 1965—66-ல் 1890 ராத்தல் இலக்கை அடைய வேண்டியுள்ளது. புன்செய் தானியங்களையும் ஏக்கருக்கு 672 ராத்தலிலிருந்து 720 ராத்தலுக்கு உயர்த்த வேண்டும்.

உணவு தானியங்கள் மட்டுமின்றி பருத்தியும், நடப்புஆண்டு

**பாசன வசதி**

விவசாய வளர்ச்சிக்கு அடிப்படை பாசன வசதி எனவே 7 பெரிய அணைத்திட்டங்களை முடித்திருக்கிறோம்.

25 லட்சம் ஏக்கர்களுக்கு கால்வாய்ப்பாசன வசதி பெறச் செய்திருக்கிறோம்,

மூன்றாம் திட்டத்தில் பரம்பிக்குளம், ஆளியாறு திட்டங்கள் நிறைவேறும். $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் புதிய பாசனம் பெறும். மின்சார உற்பத்தியை ஒருங்கிணைக்கும் பணியும் மேற்கொள்ளப்படும சிறுபாசனங்களை அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டு 27000ஏரி குளங்கள் ரூ. 38 லட்சம் செலவில் சீர்திருத்தப்படுகின்றன. அடுத்த ஆண்டில் 15 லட்சம் செலவிடப்படும். சுமார் 90 லட்சம் செலவில் 6000 கிணறுகள் வெட்டப்பட்டன. மேலும் வெட்ட உதவப்படும். குழாய்க் கிணறுத் திட்டங்களும்


3 ம் பக்கம் பார்க்க


## கசாவுபு ஆதரவு மாநிலத்தில் லுமும்பாபடை எதிர்ப்பின்றி நுழைந்தது

### நிலைமை கண்டஞ்சிய கசாவுபு அய். நா.வுக்கு இறுதி எச்சரிக்கை

லியோபோல்ட்வில்லி பிப், 26...

காங்கோவின் முன்னாள் பிரதமர் லுமும்பாவை ஒழித்துவிட்டால் எல்லாம்சரியாகிவிடுமென்று மனபால் குடித்து வந்த காங்கோ ஜனாதிபதி கசாவுபுவுக்கு லுமும்பா படுகொலை செய்யப்பட்டபின் விபரிதமான விளைவுகள் ஏற்பட்டு தன்நிலைமையே ஆட்டங்கண்டு விடுமோ வென்ற அச்சம் பலப்பட்டு விட்டது. இதற்காதாரமாக கசாவுபுவுக்கு பெருத்த ஆதரவுள்ளதாகக் கருதப்பட்டு வந்த காசாய் மாநில தலைநகரான லுலுவாபர்க்கில் லுமும்பா ஆதரவு மாநிலமான ஓரியண்டல் துருப்புக்கள் எதிர்ப்பின்றி நுழைந்து கைப்பற்றிக் கொண்டது. லுலுவா பார்க்கில் சுமார் 2000 பேர் கொண்ட படையிருந்தும் 300 பேர் கொண்ட ஓரியண்டல் துருப்பை எதிர்க்கவில்லை. லுலுவாபர்க் ராணுவ தளபதி லோகோ அய். நாவிடம் தஞ்சம் புகுந்துவிட்டார்.

லுலுவாபர்க் விமான நிலையத்திலே லுலுவாபர்க் துருப்புக்களுக்குப் பதில் ஓரியன்டல் துருப்புக்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இரு இராணுவங்களும் ஒத்துப் போயுள்ளன. இதனால் அய். நா. தலையிடாது ஒதுங்கியிருந்து விட்டது. லுமும்பா ஆதரவு துருப்புக்கள் தலைநகரை நோக்கி முன்னேறக்கூடுமென கசாவுபுவுக்கு பயங் கண்டு விட்டது.

காசாய் மாநிலத்தலைநகரான லுலுவாபர்க்கிலுள்ள லுமும்பா ஆதரவுத் துருப்புகளை நேற்று மாலை 6-மணிக்குள் வெளியேறுமாறு அய்.நா.வுக்கு லியோபோல்ட் வில்லி சர்க்கார் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அய். நா. நடவடிக்கை யெடுக்காவிடில் காங்கோ சர்க்காரே அவற்றை வெளியேற்ற அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளுமென காங்கோ செய்தியிலாகா அமைச்சர் பொலிகாங்கோ அறுவித்துள்ளார். இறுதி எச்சரிக்கைபற்றி பொலிகாங்கொவுடன் அய். நா. தளபதி தயாள் ஆலோசனை நடத்தினார்.

★★★★★★★★★★★★★★

### 1,66,000 மாணவர்க்கு கல்விச்சலுகை

### 1961 ஜூன் முதல் அளிக்கப்படும்

சென்னை, பிப். 26—

ரூபாய் நூறுக்கும் குறைவான மாத வருமானமுள்ளவரின் குழந்தைகலான ஏழை மாணவர்க்கு சாதி, மத, பேதமின்றி(பொருளாதார அடிப்படையைக் கொண்டு மட்டும் அளித்து) 9, 10, 11வது வகுப்புகளுக்கும் இலவசக்கல்வி அளிக்கப்படுமென நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பட்ஜெட் கூட்டத்தில் அறிவித்தார்.

தற்போது 6, 7, 8-வது வகுப்பு வரை அளிக்கப்படுகிறது 1,06,000 பேர் பாதிக்கட்டணம் செலுத்துன்கிறனர்.

தற்போது 2,65,000 பேர் மூன்று உயர்நிலை வகுப்புக்களிலும் படித்துவருகின்றனர்; இவர்களில் 1,66,000 பே(பெண்கள் உட்பட) இந்த இலவசக்கல்வி அளிக்கப்படக்கூடும் என கணக்கிடப்படுகிறது என்றும், இந்த வசதி 1961 ஜூன் முதல் அளிக்கப்படும் என்றும் அவர் விளக்கம தெரிவித்தார்.

★★★★★★★★★★★★★★

## பொன்மலையில் திருச்சி மாவட்ட சுயமரியாதை மாநாடு

### 12-3-61 ஞாயிறு காலை நடைபெறும்

### தலைவர்: தந்தை பெரியார் அவர்கள்

திறப்பாளர்:

**திரு. தி. பொ. வேதாசலம் பீ. ஏ.**
மத்திய தி. க. பொதுச் செயலாளர்,

**ஆனைமலை திரு. ஏ. என். நரசிம்மன் பீ. ஏ.,**
தி. க. பொதுச்செயலாளர்

**திரு. கி. வீரமணி எம். ஏ. பி. எல்.,**
கொடியேற்றிப் பேசுவர்

மற்றும் பலர் பேசுவார்கள். மாலை பொதுக்கூட்டம் உண்டு.
அனைவரும் வருக!

குறிப்பு:- காலை 8-மணிக்கு பொன்மலை ரயில் நிலையத்திலிருந்து கழக ஊர்வலம்.
மாநாட்டுக்கு நுழைவுக் கட்டணம் 25 புதுக்காசு.

# எஸ். ஆர். எம். யூ. கிளைகள் மாநாடு

## திருவாரூரில் நிறைவேறிய தீர்மானங்கள்

திருவாரூர் பிப் 26—

எஸ். ஆர், எம், யூ, தஞ்சை மாவட்ட கிளைகள் மாநாடு திருவாரூரில் 12—2—61ல் நடந்த போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:—

1 ஷெட்யூல்ட் வகுப்பு ஷெட்யூல்டு டிரைப்வகுப்பினர்களுக்கு அளிக்கும் பதவி நியமனங்களில் கையாளப்பட்டுவந்த தனிச் சலுகைமுறை பதவி உயர்வுக்கும் பொருந்தும்படியாக உத்தரவிட்ட ரயில்வே மந்திரி திரு, ஜகன்ஜீவன் ராமையும் ரயிலவே போர்டையும் இம்மாநாடு பாராட்டுவதுடன் அவ்வுத்தரவை எந்த எதிர்ப்புக்கும் அஞ்சாமல் அமுல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவ்விதசலுகையின் தங்கிய (Backward Communities) வகுப்பினர்களின் பதவி. நியமன. பதவி உயர்வு விஷயத்திலும் பொருந்தும்படி ஏற்பாடுசெய்ய வேண்டுமாய் இரயில்வே மந்திரி திரு. ஜகன்ஜீவன்ராம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

2 கல்விச்சலுகை, லீவ். பாஸ், போன்ற சலுகைகளை அநுபவிப்பதில் 3 வது தரசிப்பந்திகளைப் போல் 4 வது தரசிப்பந்திகளுக்கும் ஒரே விதமான விதிமுறைகளை ஏற்படுத்தியும் அடித்தளத்திலுள்ள 4வது தர சிப்பந்திகளுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்த ரயில்வே மந்திரி திரு. ஜெகஜீவன்ராம் அவர்களை இம்மாநாடு பாராட்டுகிறது. 4வது தர சிப்பந்திகள் பதவி உயர்வு விஷயத்தில் ஏற்கெனவே செய்த சிபாரிசுகளை அமுல்படுத்துவதில் உள்ள காலதாமதத்தை தடுக்கவும் அடித்தளத்திலுள்ள 4வது தர சிப்பந்திகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு சதவிகித உயர்ந்த கிரேடுகளை 3வது தர சிப்பந்திகளுக்கு தனித்திருப்பதுபோல் அளித்து ஆண்டுதோறும் எண்ணிக்கைக்குத்தக்க சதவிகித கிரேடுகள் நிலைத்திருக்கும்படியாக பரிசீலனை செய்யுப் நிரந்தர ஏற்பாட்டை செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

3. சதவிகித கிரேடு அடிப்படையில் பல பெரிய ஸ்டேஷன்களில் உயர் பதவிவகிக்கும் ஸ்டேஷன் மாஸ்டர் போன்ற 3வது தர சிப்பந்திகளுக்கு அளிக்கும் பல உயர்தர கிரேடுகள் போன்றே அதே ஸ்டேஷனில் அதே வேலையை திறம்பட நடக்க துணை புரியும் பாயின்ட்ஸ்மேன், ஷண்ட்மேன் ஷண்டிங் ஜமேதார் போன்ற 4 வது தரசிப்பந்திகளுக்கும் எண்ணிக்கைக்கு தக்கவாறு உயர்ந்த சதவிகித கிரேடுகளை அந்த அந்த ஸ்டேஷனில் கொடுக்க வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. துணை யார்டு மாஸ்டர், துணை காபின் ஸ்டேஷன் மாஸ்டர் பகுதி உத்யோகங்களில் ஆரம்ப கிரேடுகளில் காலியாகும் ஸ்தாபனங்களை ஷண்ட்மேன் ஷண்டிங்ஜமேதார்களுக்கு அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

அவர்களுக்கு தக்க பயிற்சி கொடுத்து பழைய எம். எஸ்.எப். பகுதியில் இருப்பது போல் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது

5. ஏராளமான தொழிலாளர்கள் பணி புரியும் திருவாரூர் கடலூர் விருத்தாசலம் மானாமதுரை சேலம், போன்ற ரயில்வே சந்திப்பு நிலையங்களில் ஓராசிரியர் ஆரம்ப இலவச பள்ளிகளை அதிகரிக்க வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

6. அடித்தளத்தில் குறிப்பிட்ட குறைந்த சம்பளம் வாங்கியும் (ரூ. 300-க்கு கீழ்) இரயில்வே தொழிலாளர் பிள்ளைகளுக்கு சென்னை மாநில அரசினர் அமுல் செய்துவரும் இலவசக்கட்டணம் போன்ற கல்விச்சலுகைகளை உடனடியாக அளிக்குமாறு இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

7. பொன்மலையில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரியை நிறுவி ஏராளமான ரயில்வே தொழிலாளர் பிள்ளைகள் படித்துமுன்னேற வசதி செய்து தருமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

8. ரெயில்ரோடு காம்பிடிஷன் பெருகி இரயில்வேயின் வருமானம் குறையுமென்ற பயம் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு எல்லா பகுதி இரயில்வே தொழிலாளர்களும் சோர்வின்றி பணியாற்றி பெரிய தேசீய ஸ்தாபனமாகிய இரயில்வே வெற்றியுடன் இயங்கும்படி செய்யஇரயில்வேதொழிலாளர்கள் எல்லோரும் பணிபுரிய வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

9. பொன்மலை இரயில்வே பள்ளிக்கூடத்தில் நாங்கள் இலவச கல்விச்சலுகை வேண்டுமென்று கேட்டுக கொண்டிருக்கிற காலத்தில் பிள்ளைகளின் படிப்பு கட்டணத்தை ஒன்றுக்கு மூன்று மடங்கு அதிகமாக்கிஇருப்பதை உடனடியாக இறக்கவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

10. மொபைல் மெடிகல் சர்வீஸ் வான் சீக்கிரமாக அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்று இம்மாநாடுகேட்டுக்கொள்கிறது.

11. தொழில் துறைகளை நாட்டு உடைமையாக்க வேண்டுமென்று அரசாங்கக் கொள்கைக்கும் நாட்டில் உள்ள பொது உணவு விடுதிகளனைத்தும் அரசாங்கத்தாராலேயே நடத்தப்பட வேண்டும்என்றும் பொதுமக்கள் கோரிக்கைக்கும், புறம்பாக இன்று இரயில்வேயில் தனிப்பட்டவர்களால் உணவு விடுதிகள் நடத்தப்பட்டு வர அனுமதிக்கப் படுகிறது. இம்முறை பொதுமக்கள் நலத்திற்கும். தொழிலாளர் நலத்திற்கும் கேடுபயப்பதால் இவ் விடுதிகளையும் உடனே இரயில்வே நிர்வாகமே ஏற்று நடத்த வேண்டுமென இம்மாநாடு இரயில்வே மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

12. இரயில்வே நடத்திவரும் உணவு விடுதிகளில் ஏற்கனவே இருந்துவந்து இரயில்வேயால் நியமிக்கப்பட்ட சுத்தம் செய்பவர்களை எடுத்துவிட்டு, இப்போது காண்ராக்ட் முறையில் அவ்வப்போது வெளியாட்களைக் கொண்டுவந்து சுத்தம்செய்வதால் சுகாதாரக் கேடான பல காரியங்கள் நடைபெற்று அவ்வுணவு விடுதிகளில் உண்ணாமல் பிரயாணிகள் தொழிலாளர்கள்உடல் நலப பாதிப்பதாக இருப்பதால், மீண்டும் ரயில்வே டிப்பார்ட்மெண்ட் ஆட்களே சுத்தம் செய்யும் முறையைக் கொண்டு வரும்படி நிர்வாகத்தைஇம்மாநாடுகேட்டுக் கொள்கிறது.

13. ஓடுவதற்கு லாயக்கற்ற (Condemned) எஞ்சின்களையும் அதை பழுதுபார்க்கப்போதுமான நல்ல சாமான்கள் இல்லாமலும், பழுப்பு கரியையும் கொடுத்து திறமையாகவும், விரைவாகவும் வேலையைஎதிர்பார்த்து அப்படி ஏதாவது கோளாறு ஏற்பட்டால், ஊழியர்களுக்கு கடுந் தண்டனையும், டிரைவர், பயர் மேன்களுக்கு சஸ்பன்சனும் செய்கின்றனர்.

திருச்சி டிவிஷன் டி. எம். இ ஊழியர்களிடத்தில் விரும்பதகாத முறையில், மரியாதைக் குறைவான வார்த்தைகளை உபயோகித்து, அருவெறுக்கத்தக்கமுறையில் கேவலமாக நடத்துகின்றார். அவரை நல்ல முறையில் நடக்கும்படியும், அவருக்கு அறிவூட்டும்படியும் டி. எஸ். யும் சி. எம். இ.யும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

14. மெக்கானிக்கல், ஓடும் தொழிலாளிகள் இவர்களிடம் ஆள் குறைப்புத்திட்டம் அமுல் படுத்துவதை தடுக்குமாறு இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

15. ஓவர் ஏஜ் (Over Age) பழுதடைந்த, மற்ற ரயில்வே தொழிலாளர் ஓட்ட முடியாத என்ஜின்களைவைத்துக்கொண்டு திறமையாக ஓட்டும் தென்பகுதி ரயில்வே தொழிலாளர்களை அதிக பனிஷ்மன்ட்களையும் Suspension களையும் கொடுத்து கேவலமாக நடத்தும் திருச்சி DME வகுப்பு வாதத்தையும், சர்வாதிகாரத்தையுப காட்டுகிறார். இதை வன்மையாக இம்மாநாடு கண்டிக்கிறது.

16 பேரளம் — காரைக்கால் பாதையில் 4 ஸ்டேஷன்களிலும் ஒரே ஆள்தான் காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணிவரை வேலைபார்க்கவெண்டும். காரைக் கோவில் பத்து ஸ்டேஷனின் டிராபிக்கேட்டையும் சாத்தி, சிக்னல் வேலையும் பார்த்துக் கொள்ளவேண்டும இத்துடன் போர்ட்டர்வேலையும் ஸ்வீப்பர் வேலையும் தண்ணீர்கொடுக்கும் வேலையும் செய்யவேண்டியிருக்கிறது. அந்த லைனில் Scp களுக்கு ரயில்வெ வீடுகள் கிடையாது. வெளியிலும் வீடு கிடைப்பதில்லை இந்தக்குறைகளை DTS, DS போன்ற அதிகாரிகள் உடனடியாக கவனித்து ஆவன செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருச்செங்கோட்டில்

# திரு. இரத்தினம் - குமாரி கனகரத்தினம்

மன்றல் விழா

—:★:—

**1—3—61 புதன்கிழமை காலை 9 மணிக்கு**

**திரு. இரத்தினம் அவர்கட்கும்**

திருச்செங்கோடு திரு. டி.கே.ஏ. சுப்ரமணிய செட்டியார் அவர்கள் மகள்

**குமாரி கனகரத்தினத்துக்கும்**

திருச்செங்கோடு, அகரம் வெள்ளாஞ்செட்டியார் கல்யாணமண்டபத்தில் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம்நடைபெறும்.

தமிழ் வித்வான் திரு. **டி. எம். அர்த்தனாரி முதலியார்**

இல்வாழ்க்கை வைபவத்தை நடத்திவைத்து சொற்பொழிவு ஆற்றுவார்.

நலம் நாடும் நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கக் கோரப்படுகிறது.

தந்தி : MALIGAI, திருச்செங்கோடு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# காவிரி நீர் முழுமையும் பயன்படுத்த பரிசீலனை

### மராமத்தமைச்சர் தகவல்

சென்னை பிப். 25—

காவேரித் தண்ணீரைக் கடலில் கலக்கவிடாது தடுத்து அத்தண்ணீர் முழுமையும் பாசனவசதிக்குப் பயன்படுத்ததமிழ்நாட்டுச்சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது; குழாய்கள் மூலமும் இந்நீரை நீர்ப்பாசன வசதிக்குப் பயன் படுத்துவது பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது.

நேற்று சட்டசபையில் கேள்வியொன்றுக்குப் பதிலிறுக்கையில் மராமத்திலாகா அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார். நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக மத்திய சர்க்கார் 27 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும். 21 கோடி ரூபாய பரம்பிகுளம், ஆளியாறு திட்டத்திற்காகப் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், மீதியுள்ள 6 கோடி ரூபாய் மற்ற திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுமென்றும், அவர் மற்றொரு கேள்விக்குப்பதிலிறுக்கையில் அறிவித்தார்.

# சிங்களத் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்

### பிற கட்சியினர் ஆதரவு

கொழும்பு, பிப் 25—

சிங்களமொழித் திணிப்பை யெதிர்த்து இலங்கைத் தமிழர்கள் நடத்திவரும் மறியல் போராட்டம் இன்னும் சில நாட்களில் மிகுந்த தீவிர நிலை எய்தலாமெனத் தெரிகிறது. இப்போராட்டம் பெரிய அளவில் பரவும் அறிகுறிகள் தோன்றிவிட்டன. போராட்டம் நடைபெற்று வரும் வட இலங்கைப் பகுதிகளில் உள்ள பிறகட்சியினரும் இப்போராட்டத்திற்குஆதரவு அளித்துவருகின்றனர்.

வரும் ஞாயிறன்று தமிழ் பேசும் மாநிலங்களில் கடையடைப்பு நடைபெறவிருக்கிறதாம். சர்க்கார் அலுவலகமுன் நடைபெறும் மறியல் நேற்று அய்ந்தாவது தினமாக நடைபெற்றுள்ளது.

# டெலிபிரிண்டர் உற்பத்தி

### கிண்டியில் தொழிற்சாலை

சென்னை, பிப். 25—

டெலிபிரிண்டர் தொழிற்சாலை யொன்றைக் கிண்டியில் அமைப்பது குறித்து நேற்று மேல்சபையில் கேள்விநேரத்தில் தொழிலமைச்சர் வெங்கட்ராமன் தகவலறிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசினரைக்கலந்தாலோசிக்கப் பட்டுள்ளதென்றும், துவக்கமான முதல் ஆண்டில் இத்தொழிற்சாலையில் உப சாமான்களை ஒன்று சேர்த்து டெலிபிரிண்டர் தயாரிக்கப்படுமென்றும், ஆனால் இரண்டாண்டுகளில்டெலிபிரிண்டர். உற்பத்தி செய்யப்பட்டு விடுமென்றும் தொழிலமைச்சர் வெங்கட்ராமன் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தனுஷ்கோடி - தலைமன்னார் போக்கு வரத்து

### ரயில்வே துணை அமைச்சர் தகவல்

புதுடில்லி. பிப். 25—

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே நடைபெற்று வரும் கப்பல் போக்குவரத்தை ஈஸ்டர்ன் ஷிப்பிங் கார்ப்பரேஷனிடம் ஒப்படைத்துவிட ரயில்வே போர்டு ஆலோசித்து வருவதாக நேற்று மக்கள் சபையில் ரயில்வே துணையமைச்சர் நவாசுகான் தெரிவித்தார். நஷ்டமேற்பட்டு வருவதே இதற்குக் காரணமென்று அவர் குறிப்பிட்டார்.

சர்க்கார் நிறுவனமானஈஸ்டர்ன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் தனுஷ்கோடி—தலைமன்னாருக்கிடையேயும், தூத்துக்குடி—கொழும்புக்கிடையேயும் கப்பல் போக்குவரத்துக்களை நடத்திவருப.

# புதிய பட்ஜெட்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பரிசோதித்து நடந்து வருகிறது. மண் வளம்பாதுகாக்காப்பது பற்றியும் திட்டம் செய்து நடந்து வருகிறது,

பால் சப்ளைக்காக பால் பண்ணை திட்டம் நடத்தப்படுகிறது. மாதவரத்தில் 750 கறவை மாடுகளுடன் ஆரம்பிக்கப்படுகிறது. 2000வரை இங்கு வளர்க்கப்படும் கால்நடை அபிவிருத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. 234 கிராமங்களில் வளர்ப்புத் திட்டமும் 39 இடங்கள் செயற்கை கருத்தரிப்பு நிலையங்களும் நடத்தப்படுகின்றன. வெளியூர்களின் பால் சென்னைக்குக் கொண்டு வரும் திட்டம் நன்கு கவனிக்கப் பட்டுஉள்ளது.

காடுகள் பராமரிப்பும் தூத்துக்குடியில் ஆழ்கடலில் மீன்பிடிப் புத்திட்டமும் துரிதப்படும்.

### தொழில் வளர்ச்சியும் கல்வியும்

தமிழ்நாட்டில்தொழில்வளர்ச்சி நெய்வேலி நிலகக்கரித்திட்ட வெற்றியைப் பொறுத்துள்ளது. இரும்புத்தொழிற்சாலை ஏற்படுவது நிச்சயமென்றும்ஜெர்மனிய நிபுணர் அறிக்கைப்படி சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும்கூறி 14 லட்சம் குழந்தைகளைப்புதிதாகப்பள்ளிகளில் சேர்க்க தீவிரமான திட்டமிருப்பதாகவும், சாதி சமயப்பாகுபாடின்றி 11 வது வகுப்புவரை ஏழைகட்கு இலவசக் கல்விதர ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிவித்தார்.

(விவரம் நாளை)

# செங்கம், கடையநல்லூரில் சுய இணைப்பு டெலிஃபோன்கள்

சென்னை, பிப். 26—

திருவண்ணாமலைடெலிஃபோன் எக்ஸ்சேஞ்சுடன் இணைக்கப்பட்டுள்ள 10 மார்க்கங்கள் கொண்ட சுயஇயக்க டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சும் ஒன்று வடஆற்காடு ஜில்லாவிலுள்ள செங்கத்தில்1961 பிப்ரவரி 16-ந்தேதியன்று ஏற்படுத்தப்பட்டது.

செங்கோட்டை டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சுடன் இணைக்கப்பட்டுள்ள 25 மார்க்கங்கள் கொண்ட சுய இயக்க டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சு ஒன்று திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சடையநல்லூரில் 1961 பிப்ரவரி 11-ந்தேதியன்று ஏற்படுத்தப்பட்டது.

# வெளிநாட்டு அஞ்சல்கள்

### தனி அதிகாரியின் மேற்பார்வையில் அனுப்பப்படும்

சென்னை. பிப். 26—

தென்னிந்தியாவில் வெளிநாட்டுத்தபால்கள் சம்பந்தமானவேலைகளைத் தகுந்த முறையில் ஒருமுகப்படுத்துவதற்காக, வெளிநாட்டுத்தபால் சூப்பரின்டென்டென்ட் ஒருவரின் பொறுப்பில் புதியவெளிநாட்டுத்தபால் பிரிவு ஒன்றை சென்னையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் இத்தபால்கள் சம்பந்தமான வேலைகள் பெரும்பாலும் சென்னை, மதுரை ஆகியவிடங்களில் உள்ள தலைமைத் தபால்நிலையங்களில் கையாளப்பட்டு வந்தன. வெளிநாட்டுத்தபால் சூப்பரின்டென்டென்டின் காரியாலயம் தற்போதைக்குச் சென்னை, ஜி. பி. ஓ. பிரதான நிலையத்தில் இருந்துவரும்.

# பயங்கர ஓசையுடன் பூமியதிர்ச்சி

நெஜ்பூர் பிப். 26—

இங்கு நேற்று மாலை 5-30 மணிக்கு கடும் பூமியதிர்ச்சி ஏற்பட்டதாக மக்கள் மீதியடைந்தனர். இவ்வதிர்ச்சியேற்படும்பொழுது ஒரு பயங்கரஓசைகிளம்பியது பூமியாட்டம் சுமார் ஒன்றரை நிமிடநேரம் நீடித்தது.

சேதமெதுவும் ஏற்பட்டுள்ளதாவென்ற தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

# பஞ்சாப் பட்ஜெட்டில் துண்டுவிழுவதை சரிகட்ட புதுவரிகள்

### கெய்ரான் சர்க்காரின் ஆட்சி நிர்வாகப் போக்கு

சண்டிகார், பிப். 26—

பஞ்சாபிலுள்ள கெய்ரான் சர்க்கார் தங்கள் துண்டுவிழும் பட்ஜெட்டைச் சரிகட்ட மக்கள்மீது புதுவரிகளை விதிக்கப் போவதாகத் தெரிகிறது. 1961-62-ம ஆண்டுக்குரிய பட்ஜெட்டை நேற்று பஞ்சாப் நிதியமைச்சரான டாக்டர் கோபிசந்த் பார்கவா அறிவித்தார், சுமார் 96 லட்சம் துண்டு விழுந்திருப்பதாக அறிவித்தார்.

இதைச் சரி கட்ட பொது விற்பனை வரியில் 4-இல் இருந்து 5 சதவிகிதம் உயர்த்தவும் கேளிக்கை வரியில் ரூபாய்க்கு 6 புதுக்காசு வசூலிக்கவும் உத்தேசிக்கப்பட்டு வருகிறதென்று அவர் கூறினார்.

இவைகள் மூலமாக மொத்தம் ரூ. 132 லட்சம் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. பட்ஜெட்டில் வருமானம் ரூ. 68,77 கோடியென்றும் செலவு ரூ. 64.73 கோடியென்றும் காண்பிக்கப்பட்டுள்ளது.

# முத்துக்குளிப்பு

### மார்ச் மத்தியில் துவங்கி ஒரு மாதம் நீடிக்கும்

தூத்துக்குடி, பிப். 26—

1961 மார்ச் இரண்டாவது வாரத்தில் தூத்துக்குடிக்கு அடுத்துள்ள கடலில் முத்துக்குளிப்பு துவங்கப்படும். சுமார் 1500 பேர் முழுப்புபவர்கள் ஈடுபடுவர் எனத் தெரிகிறது. இந்து முத்துச்சிப்பி சேகரித்தல் ஒருமாத காலத்துக்கு நீடிக்கலாம். 3 பார்களிலுமாக சுமார் 4 லட்சம் சிப்பிகள் கிடைக்கூடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

சிப்பி கழுவும் தொட்டிகள இது சம்மந்தப்பட்ட அறிவலகங்கள் முத்து கடைவீதியிலிருந்து ஒரு பர்லாங் தொலைவில்அமைக்கப்படும்.

போலீசு பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்படும் சுகாதார அதிகாரிகளும் தயாராக உள்ளனர்.

# மைசூர் அமைச்சரவை 14 பேராக விரிவு

### நிஜலிங்கப்பா ஆதரவாளர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்

பெங்களூர். பிப் 26—

மைசூர் அமைச்சரவை விரிவாக்கப்பட்டு விட்டதாக நேற்று இங்கு அறிவிக்கப்கப்பட்டது. 10 பேர் கொண்ட அமைச்சரவையில் புதிதாக எச். கே. வீரண்ணா, எச். எஸ். ருத்ரப்பா; பி. சிவ குந்தபாலிகா, விரேந்திரபடீல் ஆகிய நால்வரைச் சேர்த்து 14 பேராக விரிவாக்கப்பட்டது. இவர்கள் நால்வரும் நிஜலிங்கப்பா அமைச்சரவையில் உறுப்பினர்களாக விருந்தனர்.

9 பேர் கொண்ட மைசூர் பிரதேச தேர்தல் கமிட்டி அமைக்கப்பட்டு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக முதலமைச்சர் ஜெட்டியும் பிரதேச காங்கிரசுத் தலைவர் நிஜலிக்கப்பாவும் கூட்டறிக்கை விடுத்துள்ளனர்.

# ரயில்வேயில் கள்ளப்பிரயாணிகள்

சென்னை, பிப். 26—

கடந்த 21, 22 தேதிகளில் செங்கல்பட்டிலும் ஆவடியிலும் திடீர் சோதனை நடத்தியதன் பயனாக டிக்கெட் வாங்காமல் கள்ளத்தனமாகப்பிரயாணம் செய்பவர்கள் 50 பேர் பிடிபட்டனர்.

இவர்களில் சுமார் 20 பேருக்கு ரூ. 50 முதல் ரூ. 100 வரை அபராதம் விதிக்கப்பட்டது என்று ரயில்வே அதிகாரிகள் அறிவிக்கின்றனர்.